1. “Any fact from which, either by itself or in connection with other facts, the existence, non-existence, nature or extent of any right, liability, or disability, asserted or denied in aby suit or proceedings, necessarily follows” is

(A) Material proposition
(B) Fact
(C) Evidence
(D) Fact in Issue

“ஒரு வழக்கிலோ நடவடிக்கையிலோ வலியுறுத்தப்படும் அல்லது மறுக்கப்படும் ஓர் உரிமை, பொறுப்புடைவு அல்லது ஏலாமை ஆகிய இவற்றின் உள்ளமை, இல்லாமையையும் மற்றும் அதன் இயல்பு, அளவு ஆகியவற்றையும் தவறாது துணியப்படும் வகையில் அமையும் நிகழ்மை, தீர்ப்புதவு நிகழ்மை எனப்படும். இந்நிகழ்மை தனித்தோ, பிற நிகழ்மைகளுடன் இணைந்தோ அமையலாம்” இது

(A) தீர்வுத்தரு நிகழ்மை
(B) நிகழ்மை
(C) சாட்சியம்
(D) முக்கியமான கூற்று

2. Believing the existence of a fact amounts to

(A) Proved
(B) Disproved
(C) Proved and disproved
(D) Neither proved nor disproved

ஒரு சங்கதி உளது என்று நம்புவது

(A) மெய்ப்பிக்கப்பட்டது
(B) பொய்ப்பிக்கப்பட்டது
(C) மெய்ப்பிக்கப்பட்டது அல்லது பொய்ப்பிக்கப்பட்டது
(D) மெய்ப்பிக்கபடவுமில்லை அல்லது பொய்ப்பிக்கப்படவுமில்லை

3. Disproved means

(A) Not believing the existence of a fact
(B) Believing the non-existence of a fact
(C) Not believing the non-existence of a fact
(D) Believing the existence of a fact

பொய்பிக்கப்பட்டது என்பது

(A) நிகழ்மை ஒன்று உளது என்று நம்பாமலிருப்பது
(B) நிகழ்மை இல்லது என நம்புவது
(C) நிகழ்மை இல்லது என நம்பாமலிருப்பது
(D) நிகழ்மை உளது என நம்புவது

4. On proving one fact regarding other facts as proved is

(A) Conclusive proof (B) May presume

(C) Shall presume (D) Proved

முதல் நிகழ்மையைப் பொறுத்த சான்றுறுதியின் பேரில் அடுத்த நிகழ்மை மெய்ப்பிக்கப்படுவது

(A) மெய்ப்பிக்கப்பட்டது (B) மெய்யெனக் கொள்ளலாகும்

(C) துணிபு கொள்ளலாகும் (D) அறுதியான நிருபணம்

5. Evidence may not be given on

(A) Existence of a fact in issue

(B) Non-existence of every fact in issue

(C) Relevant fact

(D) Material proposition of law

பின்வரும் எவற்றிக்கு சாட்சியம் கொடுக்கப்படலாகாது

(A) நிகழ்மையின் உண்மை

(B) நிகழ்மையின் இன்மை

(C) நிகழ்மையின் தொடர்புடைமை

(D) சட்டம் பற்றிய முக்கியமான கூற்று

6. 'B' murdered 'A' by beating him. Bystander shouted. The shouting of bystander is a

(A) Only hear say

(B) Irrelevant fact

(C) Not so connected with fact in issue

(D) Relevant fact

'ஆ' என்பவர் 'அ' வை அடித்து கொலை செய்கிறார். அருகிலிருப்பவர்கள் கூச்சலிடுகின்றனர். அருகிலிருப்பவர்களின் கூச்சலானது

(A) செவி வழி சாட்சியம்

(B) தொடர்பில்லா நிகழ்மை

(C) தொடர்பில்லா தீர்வுதரு நிகழ்மையில்

(D) தொடர்புடைய நிகழ்மை

7. The question is whether 'A' robbed 'B' the fact that, shortly before the robbery, 'B' went to a fair with money in his possession, and that he showed it or mentioned the fact that he had it, to their person, are relevant. This is relating to

(A) Occasion (B) Cause

(C) Effect (D) Preparation

'அ' என்பார் 'ஆ' என்பவரைக் கொள்ளையடித்தாரா என்பது கேள்வி. கொள்ளையடிப்பதற்குச் சற்று முன்பு, தம் வசத்திலுள்ள பணத்துடன் சந்தையொன்றுக்கு 'ஆ' சென்றார் என்னும் நிகழ்மையும் மூன்றாமவர்களுக்கு அதைக் காட்டினார். அல்லது தாம் அதை வைத்திருந்த விவரத்தைக் குறிப்பிட்டார், என்னும் நிகழ்மையும் தொடர்புற்றவையாகும். இவை எதனுடன் தொடர்புடையது எனில்

(A) நிகழ்ந்த தருணம் (B) அவற்றின் காரணம்

(C) விளைவு (D) முன்னேற்பாடு

8. The irrelevant fact for the existence of a custom is any transaction by which

(A) The custom is claims

(B) The custom is modified

(C) The custom is created

(D) The custom is designed

வழக்கம் உண்மையாக இருப்பது குறித்து தொடற்பற்றா நிகழ்மையானது பின்வரு நடவடிக்கையின்படியாகும்

(A) வழக்கம் கோரப்பட்டது

(B) வழக்கம் மாற்றி அமைக்கப்பட்டது

(C) வழக்கம் படைக்கப்பட்டது

(D) வழக்கம் உறுகொடுக்கப்பட்டது

9. Under sec 18 of the Law of Evidence the person who cannot make admissions are

(A) Party to the proceedings

(B) Agents authorized by such party

(C) Party suing in representative character making admission while holding such character

(D) Admission made by a party's witness

இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 18-ன் படி யாரால் ஏற்புரைகள் செய்ய முடியாது

(A) நடவடிக்கையில் உள்ள தரப்பினரால்

(B) தரப்பினரால் அதிகாரமலிக்கப்பட்ட முகவர்

(C) பிரிநித்துவ நிலையில் உரிமை வழக்கிடும் போது பிரிவித்துவ நிலையில் ஏற்புரை செய்வது

(D) தரப்பினரின் சாட்சியத்தால் செய்யப்பட்ட ஏற்புரை

10. Substantive law of confession is contained in

(A) Sec 24 of the Law of Evidence

(B) Sec 164 of the Criminal Procedure Code, 1973

(C) Sec 39 of the Law of Evidence

(D) Sec 161 of the Cr.P.C, 1973

நிலைமுறைச் சட்ட ஒப்புதலுரை வழங்கப்பட்டுள்ள பிரிவானது

(A) இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 24

(B) குற்றவியல் விசாரணை சட்டம் பிரிவு 164

(C) இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 39

(D) குற்றவியல் விசாரணை சட்டம் பிரிவு 161

11. Omni suspicious mores

(A) Alone and free from remotest taint of suspicion

(B) One cannot be punished on suspicious

(C) Reasonable suspicion is sufficient

(D) Suspicion is prevalent everywhere

ஓம்னி சஸ்பிஷியஸ் மாசசு

(A) சற்று கூட சந்தேகத்திற்கிடமின்றி இருத்தல்

(B) சந்தேகத்தில் ஒருவருக்கு தண்டனை வழங்கல் கூடாது

(C) தகுந்த அளவு சந்தேகமிருப்பின் போதும்

(D) சந்தேகமென்பது எவ்விடத்திலும் பரவியுள்ளது

12. 'A' and 'B' are jointly tried for the murder of 'C', it is proved that 'A' said 'B' and 'I' murdered 'C'. Court can

(A) Consider the offence proved against the co-accused

(B) Court may consider the effect of Confession

(C) Court shall consider the offence not proved against co-accused

(D) It is an inadmissible evidence

'இ' என்பவரின் கொலைக்காக 'அ' என்பவரும் சேர்ந்திணையாக விசாரணை செய்யப்படுகின்றனர். 'ஆ' வும் நானும் 'இ' யைக் கொலை செய்தோம் - என்று 'அ' சொன்னதாக மெய்ப்பிக்கப்படுகிறது. 'ஆ' வுக்கு பாதமாக இந்த ஒப்புதலுரையினால் ஏற்படுகின்ற விளைவு என்ன என்பதை நீதிமன்றம் கவனத்திற்கு எடுத்து கொள்ளும் விதம்

(A) குற்றமானது சேர்ந்தினை குற்றவாளிக்கு எதிராய் மெய்ப்பிக்கப்பட்டதென கருத்தில் கொள்ளும்

(B) ஒப்புதலுரையின் விளைவை நீதிமன்றம் கருத்தில் கொள்ளலாம்

(C) குற்றமானது சேர்ந்தினை குற்றவாளிக்கு எதிராய் மெய்ப்பிக்கப்படவில்லையென கருத்தில் கொள்ளும்

(D) இவை ஏற்புடையதாகாத சாட்சியமாகும்

13. Which section deals with the proof as to verification of digital signature?

(A) S.73A

(B) S.73B

(C) S.73C

(D) S.73D

எண்சார் கையெழுத்தைச் சரிபார்த்தல் குறித்த சான்றை கூறும் பிரிவு எது?

(A) பிரிவு 73A

(B) பிரிவு 73B

(C) பிரிவு 73C

(D) பிரிவு 73D

14. Dying declaration by gesture is admissible. This has beta held in

(A) Queen Emperor vs. Abdulla

(B) Pakala Narayanswamy vs. King Emperor

(C) Pandurang vs. State of Hyderabad

(D) Periyaswamy moopan in re case

சைகையின் மூலம் சொல்லப்படும் மரண வாக்குமூலம் ஏற்புடையது என எவற்றில் வழங்கப்பட்டுள்ளது

(A) குயின் எம்பரார் எதிர் அப்துல்லா

(B) பகல நாரயணசுவாமி எதிர் கிங் எப்பெரார்

(C) பாண்டுரங் எதிர் ஸ்டேட் ஆஃப் ஐதராபாத்

(D) பெரியசுவாமி மூபன் இன் ரீ வழக்கு

15. Entries in the books of account regularly kept in the course of business

(A) Is Sufficient to charge any person with liability

(B) Is Not alone sufficient to charge any person liability

(C) Can be considered as conclusive evidence

(D) It is irrelevant under sec 34

அலுவலக நடப்பு முறையில் ஒழுங்காக வைத்து வரப்பட்ட கணக்குப் புத்தகங்களின் பதிவுகள்

(A) கடப்பாட்டைச் சுமத்துவதற்குப் போதுமான சாட்சியம்

(B) கடப்பாட்டைச் சுமத்துவதற்குப் போதுமான சாட்சியமில்லை

(C) அறுதியான சாட்சியமாக கருதப்படும்

(D) பிரிவு 34-ன் கீழ் படி தொடர்பில்லை

16. Under Sec 40 of Law of Evidence the existence of any judgment by law that prevents any court from taking cognizance of a suit or holding a trial is a relevant fact. This is based on the principle of

(A) Estoppel
(B) Interpleader Suit
(C) Res judicata
(D) Lis pendens

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 40-ன் படி உரிமை வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதையோ அல்லது அத்தகைய ஒரு விசாரணையை நடத்துவதையோ சட்டப்படி தடுக்கும் தீர்ப்பின், கட்டளையின் அல்லது தீர்ப்பாணையின் உண்மை ஒரு தொடர்புற்ற பொருண்மையாகும். இவை எந்த நியமத்தை அடிப்படையாய் கொண்டது

(A) முரண்தடை
(B) இடைதரப்பு உரிமை வழக்கு
(C) முன் தீர்ப்பு தடை
(D) நிகழ் வழக்கு

17. Regarding handwriting as the relevant fact the difference between sec 45 and 47 is that Sec 45 deals with the

(A) Opinion of familiar person
(B) Opinion of Experts
(C) Opinion based on observation
(D) Opinion as to electronic signature

தொடர்புடைய நிகழ்மையானது கையெழுத்தாக இருப்பின் பிரிவு 45 மற்றும் பிரிவு 47ற்கு உள்ள வேறுபாடானது என்னவெனில் பிரிவு 45 ல் வழங்கப்பட்டிருப்பது

(A) பிரபலமான நபரின் கருத்து
(B) வல்லுநர்களின் கருத்து
(C) கூர்ந்து நோக்குதலை அடிப்படையாய் கொண்ட கருத்து
(D) மின்னணு பற்றிய கருத்து

18. As to the relevance of the handwriting sec 47 of the Evidence Act deals with

(A) The opinion of Experts
(B) The opinion of acquainted person
(C) Opinion as to electronic signature
(D) Opinion of familiar person

கையெழுத்து பற்றிய கருத்தின் தொடர்பு குறித்து பிரிவு 47 கூறுவது

(A) வல்லுநர்களின் கருத்து
(B) குறித்து அறிந்த நபரின் கருத்து
(C) மின்னணு கையொப்பம் பற்றிய கருத்து
(D) பிரபலமான நபரின் கருத்து

19. When the court has to form opinion as to the relationship of one person to another?

(A) Opinion of member of family having special knowledge is relevant

(B) Opinion by an expert is relevant

(C) Opinion based DNA test is relevant

(D) None of the above

நீதிமன்றம், ஒருவருக்கு மற்றொருவரிடமுள்ள உறவுமுறை பற்றி ஒரு கருத்துக்கு வரவேண்டியிருக்கும்போது

(A) குடும்பத்தைக் குறித்து சிறப்பான தகவல் வைத்திப்பவரின் கருத்துக்கள் தொடர்புடையனதாகும்

(B) வல்லுநர்களின் கருத்து தொடர்புடையதாகும்

(C) DNA தேர்வின் அடிப்படையான கருத்து தொடர்புடையதாகும்

(D) மேற்குறிப்பிட்ட எவையுமில்லை

20. Under sec 54 of the Law of Evidence, previous conviction is relevant

(A) As evidence of bad character

(B) As evidence guilt

(C) As evidence of noted person

(D) As evidence of offence subsequently committed

முந்திய தண்டனைத் தீர்ப்பு ஒன்று பிரிவு 54ல் பின்வரும் சூழ்நிலைகளில் தொடர்புற்றதாகும்

(A) தீய குணத்திற்கான சாட்சியமென்னும் வகையில்

(B) குற்றப்பழிக்கு சாட்சியமென்னும் வகையில்

(C) குறிப்பிட்ட நபர் சாட்சியமென்னும் வகையில்

(D) அதன்பிறகு செய்யப்பட்ட சாட்சியமென்னும் வகையில்

21. The court cannot take judicial notice of

(A) Articles of war for the Indian Army

(B) Articles of war for the Indian Navy

(C) Parliamentary Proceedings

(D) Public Document with the custody of the Government

நீதிமன்றம், நீதிமுறை கவனத்திற்கு எடுத்து கொள்ள கூடாதவை

(A) இந்திய தரைப்படை ஒழுங்குமுறை விதிகள்

(B) இந்திய கடற்படை ஒழுங்குமுறை விதிகள்

(C) அரசியல் நிர்ணயசபை நடப்புமுறை

(D) அரசின் பாதுகாப்பில் உள்ள பொது ஆவணங்கள்

22. The fact which need not be proved

(A) Fact of which court will take judicial notice

(B) Admitted facts

(C) Both (A) and (B)

(D) Neither (A) nor (B)

மெய்பிக்க தேவையில்லா நிகழ்மைகள்

(A) நீதிமன்றம் நீதிமுறையில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய சங்கதி

(B) ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்மை

(C) (A) மற்றும் (B)

(D) (A) வும் இல்லை (B) வும் இல்லை

23. Facts which cannot be proved by oral Evidence are

(A) Content of document

(B) Gestures

(C) Signs

(D) Execution part of a document

வாய்மொழி சாட்சியம் மூலமாக மெய்ப்பிக்க முடியாத நிகழ்மைகள் எவையெனில்

(A) பத்திரங்களின் உள்ளடக்கம்

(B) முகபாவம்

(C) சைகை

(D) எழுதி ஒப்பம் கொடுக்கப்பட்ட பத்திரத்தின் பகுதி

24. A person is shown to have been in possession of a number of placards. All printed at one time from one original. The correct one is

(A) These placards are original

(B) There placards are primary evidence of the content of the original

(C) They are not primary evidence of the contents of the original

(D) They are not the primary evidence of the contents of the rest

விளம்பரத் தட்டிகள் பலவற்றை ஒருவர் தம் வசம் வைத்திருந்ததாகக் காட்டப்படுகிறது. அவை ஒரே மூலத்தில் இருந்து ஒரே நேரத்தில் அச்சடிக்கப்பட்டது. எது சரியானவை

(A) விளம்பரத் தட்டிகளானது மூலமாகும்

(B) விளம்பரத் தட்டிகள் மூலத்தின் உள்ளடகத்திற்கு தலைநிலை சாட்சியாகும்

(C) விளம்பரத் தட்டிகள் மூலகத்தின் உள்ளடகத்திற்கு தலைநிலை சாட்சியாகாது

(D) விளம்பரத் தட்டிகள் மற்ற ஏதொன்றின் உள்ளடகத்திற்கு தலைநிலை சாட்சியாகாது

25. Copies made from or compared with the original are

(A) Primary evidence of the original

(B) Secondary evidence

(C) Direct evidence

(D) Indirect evidence

மூலத்திலிருந்து தயாரிக்கப்பட்ட அல்லது அதனுடன் ஒத்துப்பார்க்கப்பட்ட நகல்கள்

(A) மூலத்தின் தலைமை சான்று

(B) துணைநிலை சான்று

(C) நேர் சான்று

(D) மறைமுக சான்று

26. Under Sec 66 of the Law of Evidence notice is not required in order to render Secondary evidence admissible in the following situations

(A) The document is in the possession of the adverse party

(B) The document is in the possession of adverse attorney

(C) The document is in the possession of adverse party's pleader

(D) Adverse party has admitted the loss of the document

சாட்சியச் சட்டம் பிரிவு 66ன் படி பின்வரும் எந்த ஒன்றில் துணைநிலை சாட்சியத்தை ஏற்கத்தக்கதாக செய்வதற்கு அறிவிப்பு அவசியம் ஆகாது

(A) எதிர்தரப்பினர் வசத்திலுள்ள பத்திரம்

(B) எதிர்தரப்பு முகவர் வசத்திலுள்ள பத்திரம்

(C) எதிர்தரப்பு வழக்குறைஞர் வசத்திலுள்ள பத்திரம்

(D) பத்திரம் தொலைந்து போனதாக எதிர்தரப்பினர் ஒப்பு கொண்டிருக்கும் போது

27. The circumstances where the execution of any document is need not be proved by calling attesting witness are

(A) The document is registered according to Indian Registration Act, 1908

(B) If two attesting witnesses are alive

(C) Content of the document is not expressed in the presence of the attesting witness

(D) Content of the document is entered by fraud

எப்போது ஒரு ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டதை மெய்ப்பிப்பதற்கு, சான்றொப்பமிடும் ஒரு சாட்சியை தருவிப்பது அவசியமானது ஆகாது

(A) 1908-ம் ஆண்டு இந்தியப்பதிவுச் சட்டத்தின் வகைமுறைகளுக்கிணங்கப் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற ஒரு பத்திரம்

(B) சான்றொப்பமிட்ட இரண்டு சாட்சிகள் உயிரோடு இருக்குமிடத்து

(C) பதிவுருக்களின் உள்ளடக்கம் சான்றொப்பமிட்ட சாட்சிகள் முன்னிலையில் வெளிப்படுத்தாதிருப்பது

(D) பதிவுருக்களின் உள்ளடக்கம் மோசடியின் பேரில் நுழையப்பட்டிருந்தால்

28. While proving the execution of a document if no attesting witness is found the proof requires

(A) Proof of signature of the executant

(B) Proof of handwriting of the executant

(C) Proof of the content of the document

(D) Proof of the non-availability of the attesting witness

பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டதை மெய்ப்பிக்க சான்றொப்பமிட்ட சாட்சி எவரையும் கண்டுபிடிக்க முடியவில்லையானால், மெய்ப்பிக்க தேவையானவை

(A) நிரைவேற்றுபவரின் கையொப்ப நிருபணம்

(B) நிரைவேற்றுபவரின் கையெழுத்து நிருபணம்

(C) பத்திரங்களின் உள்ளடக்க நிருபணம்

(D) சான்றொப்பமிட்ட சாட்சி கிடைக்காமல் இருப்பதின் நிருபணம்

29. The method by which handwriting cannot be proved

(A) By the opinion of the expert

(B) By the person who is familiar with the handwriting of the person

(C) By comparison of signature

(D) Proof of person alleged to have signed the document

எம்முறையில் கையெழுத்து மெய்ப்பிக்கப்பட முடியாது?

(A) வல்லுநர்களின் கருத்தினால்

(B) அந்த நபரின் கையெழுத்தானது எவருக்கு பரிட்சையமானதாக இருக்குமோ அவரால்

(C) கையெழுத்தை ஒத்துப்பார்த்து

(D) கூறப்படும் நபர் பத்திரத்தில் கையொப்பமிட்டாரென கூறப்பட்ட நபரை மெய்ப்பித்தலால்

30. The specialty of certified copies under the Indian Evidence Act is

(A) They can be treated as primary evidence

(B) Their execution cannot be rebutted

(C) Their genuineness may be presumed

(D) Their genuineness shall be presumed

இந்திய சாட்சிய சட்டத்தின் படி உறுதிச் சான்றிட்ட நகல்களின் சிறப்பானது

(A) அதை தலை நிலைச் சான்றாக பயன்படுத்த முடியும்

(B) அது எழுதப்பட்டதை தவறு என மெய்ப்பிக்க முடியாது

(C) நீதிமன்றம் அதன் உண்மை தன்மையை அனுமானிக்கலாம்

(D) அதன் உண்மை தன்மையை நீதிமன்றம் துணிபு கொள்ளலாம்

31. Under sec 65A of the Evidence Act computer output is deemed as a

(A) Document

(B) Direct evidence

(C) Information

(D) Printed material

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65A-ன் படி கணிபொறி வெளிப்பாடு எவ்வாறு கருதப்படுகிறது எனில்

(A) ஆவணமாக

(B) நேரிடை சாட்சியமாக

(C) தகவலாக

(D) அச்சிடப்பட்ட முக்கியப்பகுதியாக

32. Those which form public documents are

1. Record of sovereign authority

2. Record of official bodies and tribunals

3. Registered documents

(A) 1 is correct

(B) 2 is correct

(C) 1 and 2 are correct

(D) All are correct

பொது பத்திரங்களாவது

1. இறையாண்மை அதிகார அமைப்பு பதிவிதழ்கள்

2. அரசு அதிகாரம் பெற்ற குழுக்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் பதிவிதழ்கள்

3. பதிவுப் பெற்ற ஆவணங்கள்

(A) 1 சரியானது

(B) 2 சரியானது

(C) 1 மற்றும் 2 சரியானது

(D) அனைத்தும் சரியானது

33. Certified copies of public documents under Sec 76 has to fulfill the following conditions

1. Dated
2. Subscribed in the name of the officer
3. Official title of the officer is to be given
4. Shall be sealed

(A) 1 and 2 are correct

(B) 1, 2 and 3 are correct

(C) 1, 2 and 4 are correct

(D) All are correct

பிரிவு 76-ன் படி பொதுப் பத்திரங்களின் உறுதி சான்றளிக்கப்பட்ட நகல்கள் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

1. தேதி இடப்பட வேண்டும்
2. அலுவலரின் பெயரில் அடிக்கையொப்பமிடப்பட வேண்டும்
3. அலுவலர் பதவி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்
4. இலச்சினையொன்றைப் பயன்படுத்த வேண்டும்

(A) 1 மற்றும் 2 சரியானது

(B) 1, 2 மற்றும் 3 சரியானது

(C) 1, 2 மற்றும் 4 சரியானது

(D) அனைத்தும் சரியானது

34. Other than the documents mentioned U/S 24 are called

(A) public

(B) private

(C) foreign

(D) both public and private

பிரிவு 24 ல் சொல்லப்பட்டவைகளைத் தவிர மற்ற ஆவணங்களை எவ்வாறு அழைக்கலாம்?

(A) பொது ஆவணம்

(B) தனியார் ஆவணம்

(C) வெளிநாட்டு ஆவணம்

(D) பொது மற்றும் தனியார் ஆவணம்

35. Proceedings of the legislatures can be proved by

1. Journal of legislations
2. By published Act
3. Published Abstracts
4. Copies printed by order of the court

(A) 1 is correct
(B) 1, 2 is correct
(C) 2, 3 and 4 are correct
(D) All are correct

சட்டமன்ற நடவடிக்கைகளை மெய்ப்பிப்பது

1. சட்டங்களின் அன்றாட நடவடிக்கை குறிப்புகள்
2. வெளியிடப்பட்ட சட்டங்கள்
3. சுருக்கக் குறிப்புகள்
4. நீதிமன்ற கட்டளையால் அச்சிடப்பட்ட நகல்கள்

(A) 1 மட்டும் சரி
(B) 1 மற்றும் 2 சரி
(C) 2, 3 மற்றும் 4 சரி
(D) அனைத்தும் சரி

36. Presume means

(A) Regard a fact is proved until disproved
(B) Regard a fact is disproved until proved
(C) Regard a fact as not proved until disproved
(D) Regard a fact as not proved

மெய்யென கொள்ளலாகும் என்பது

(A) நிகழ்மை பொய்ப்பிக்கப்படுவது வரை மெய்ப்பிக்கப்பட்டதாகக் கருதலாம்
(B) நிகழ்மை மெய்ப்பிக்கப்படுவது வரை பொய்ப்பிக்கப்பட்டதாகக் கருதலாம்
(C) நிகழ்மை மெய்ப்பிக்கப்படவில்லையென பொய்ப்பிக்கப்படுவது வரை கருதலாம்
(D) நிகழ்மை மெய்ப்பிக்கப்படவில்லையெனக் கருதலாம்

37. Shall presume

(A) Is a legal presumption
(B) Is a natural presumption
(C) Presumption of a fact
(D) Discretionary presumption

துணிபு கொள்ளலாகும் என்பது

(A) சட்ட துணிபு
(B) இயற்கை துணிபு
(C) நிகழ்மையின் துணிபு
(D) விருப்புரிமை துணிபு

38. When a document is a confession statement of an accused and signed by any judge the court?
(A) Shall presume its correctness
(B) May presumed its correct
(C) Court can take it as conclusive proof
(D) None of the above

ஒரு ஆவணமானது கைதியின் ஒப்புதலுரையாக இருந்து நீதிபதியால் கையொப்பமிடப்படும்போது அவ்ஆவணத்தை

(A) மெய்யென கொள்ளுதல் ஆகும்
(B) துணிபு கொள்ளுதல் ஆகும்
(C) நீதிமன்றம் அதனை அறுதியான நீருபணம் என கருதலாம்
(D) மேற்கூறிய எதுவுமில்லை

39. Regarding every electronic record purporting to be official gazette the court shall presume its
(A) Correctness (B) Genuineness
(C) Clarity (D) Accuracy

அரசுப் பதிவிதழாகப் புலப்படுகின்ற மின்னணு பதிவுறுவில் நீதிமன்றம் துணிபு கொள்ள வேண்டியது

(A) சரியானது என (B) மெய்யானது என
(C) தெளிவானது என (D) துல்லியமானது என

40. Maps shall be presumed by the court as accurate when they are made by
(A) Central Government (B) State Government
(C) Both Central and State Government (D) All Union Territories

பின்வருபவரால் தயாரிக்கப்பட்டதாகப் புலப்படுகின்ற புவிப்படங்கள் துல்லியமானவை என நீதிமன்றம் துணிபு கொள்ளும்

(A) மத்திய அரசு (B) மாநில அரசு
(C) மத்திய அரசு மற்றும் மாநில அரசு (D) அனைத்து யூனியன் பிரதேசங்கள்

41. The one which the court may presume is
(A) Map published by a Person
(B) Map published by the state Government
(C) Map published by the central Government
(D) Map published both by the Central and State Government

பின்வருபவனவற்றில் நீதிமன்றம் மெய்யெனக் கொள்வது

(A) ஒரு நபர் வெளியிட்ட புவிப்படங்கள்
(B) மாநில அரசு வெளியிட்ட புவிப்படங்கள்
(C) மத்திய அரசு வெளியிட்ட புவிப்படங்கள்
(D) மாநில மற்றும் மத்திய அரசு வெளியிட்ட புவிப்படங்கள்

42. The one which the court may presume as genuine

(A) Signature in a document of 30 yrs old

(B) Signature in a public document

(C) Signature of a judge in a confession statement

(D) Signature in a document of 30 yrs old and signature in a public document

நீதிமன்றம் மெய்யென கொள்வது

(A) முப்பது ஆண்டுகால பத்திரத்தில் இருக்கும் கையொப்பம்

(B) பொது ஆவணத்தில் இருக்கும் கையொப்பம்

(C) ஒப்புதலுரையில் இருக்கும் நீதிபதியின் கையொப்பம்

(D) முப்பது ஆண்டுகால பத்திரம் மற்றும் பொது ஆவணத்தில் இருக்கும் கையொப்பம்

43. The one which the court shall presume is

(A) Genuineness of book printed under the authority of Government

(B) Handwriting of a person in a document of thirty years old

(C) Common course of natural events

(D) Human conduct

நீதிமன்றம் துணிபுக் கொள்ளலாகும் எனக் கொள்வது

(A) அரசின் அதிகாரத்தில் அச்சிடப்பட்டதாக புலப்படுகின்ற புத்தகத்தின் மெய் தன்மை

(B) முப்பது ஆண்டுகால இருக்கும் ஆவணத்தில் இருக்கும் நபரின் கையொப்பம்

(C) இயற்கை நிகழ்வுகளின் பொதுவான போக்கு

(D) மனித நடத்தை

44. The authentication of a document by a notary public

(A) Considered as conclusive prove

(B) May be presumed by the court

(C) Shall not be presumed by the court

(D) Shall be presumed by the court

சான்றுறுதி அதிகாரி உறுதி ஒப்பமிடப்பட்ட ஆவணத்தை நீதிமன்றமானது

(A) அறுதியான நிருபணமாகக் கொள்ளலாம்

(B) அனுமானிக்கலாம்

(C) அனுமானிக்கலாகாது

(D) மெய்யென அனுமானிக்க வேண்டும்

45. 'A' intentionally and falsely leads 'B' to believe that certain land belongs to 'A' and thereby induces 'B' to buy and pay for it. The land afterwards become the property of 'A'. 'A' seeks to set aside the sale. 'A' cannot do it due to

(A) Estoppel

(B) Promissory estoppel

(C) Quasi-estoppel

(D) Admission

'அ' என்பவர் குறிப்பிட்ட நிலம் தமக்குச் சொந்தமானது என்று பொய்யாக, 'ஆ' என்பவரை உட்கருத்துடன் நம்புமாறு செய்து, அதன்மூலம் அதை வாங்குமாறும், அதற்காக தொகை செலுத்துமாறும் 'ஆ' வைத் தூண்டுகிறார். 'ஆ' அதனை வாங்கிய பின்பு 'அ' விற்கு அச்சொத்தில் உரிமை வருகிறது 'அ', 'ஆ' வுடனான முதல் விற்பனையை ரத்து செய்ய விரும்புகிறார். இது முடியாது ஏனெனில்

(A) முரண்தடையாகும்

(B) உறுதியளிப்பு முரண்தடையாகும்

(C) போல்வு முரண்தடையாகும்

(D) ஏற்புரையாகும்

46. “A Bill of Exchange was accepted for good consideration”

(A) This may be presumed by the court

(B) This shall be presumed by the court

(C) This shall not be presumed by the court

(D) This need not be proved

“ஒரு மாற்றுச்சீட்டு சரியான மறுபயனுக்காக ஒத்துக் கொள்ளப்பட்டது” என

(A) மெய்யென அனுமானிக்க வேண்டும்

(B) அனுமானிக்கலாம்

(C) நீதிமன்றம் அனுமானிக்கலாகாது

(D) மெய்ப்பிக்கத் தேவையில்லை

47. “A Judicial and official acts have been regularly performed”

(A) This may be presumed by the court

(B) This shall be presumed by the court

(C) This shall not be presumed by the court

(D) This need not be proved

நீதிமுறை மற்றும் அலுவல் முறைச் செய்கைகள் முறைப்படி செய்யப்பட்டிருக்கின்றன என்று

(A) நீதிமன்றம் அனுமானிக்கலாம்

(B) அனுமானிக்க வேண்டும்

(C) நீதிமன்றம் அனுமானிக்கலாகாது

(D) மெய்ப்பிக்கத் தேவையில்லை

48. A man refuses to answer a Question: which he is not compelled to answer by law, the answer if given would be unfavorable to him

(A) This need not be proved

(B) This shall be presumed by the court

(C) This shall not be presumed by the court

(D) This may be presumed by the court

சட்டத்தின்படி பதில் சொல்லத் தாம் கட்டாயப்படுத்தப்பட முடியாத கேள்வியொன்றுக்குப் பதில் சொல்ல ஒருவர் மறுக்கிறார், இச்சூழ்நிலையில் அவர் பதில் அளித்தால் அவரது பதில் அவருக்கு சாதகமாக இருக்காது என

(A) மெய்பிக்கத் தேவையில்லை

(B) அனுமானிக்க வேண்டும்

(C) நீதிமன்றம் அனுமாமிக்கலாகாது

(D) நீதிமன்றம் அனுமானிக்கலாம்

49. “Common course of business has been followed in a particular case”

(A) This may be presumed by the court

(B) This shall be presumed by the court

(C) This shall not be presumed by the court

(D) This need not be proved

குறிப்பிட்ட நேர்வுகளில் சாதாரணமான அலுவல் நடப்புமுறை செய்யப்பட்டிருக்கின்றன என்று

(A) நீதிமன்றம் அனுமானிக்கலாம்

(B) அனுமானிக்க வேண்டும்

(C) நீதிமன்றம் அனுமாமிக்கலாகாது

(D) மெய்ப்பிக்கத் தேவையில்லை

50. When the term of a contract, or of a grant, or of any other disposition of property, have been reduced to the form of a document, no evidence shall be given in proof of the terms of such contract or grant or other disposition of property except the document itself. This is based on the principle

(A) The best evidence (B) Estoppel

(C) Promissory Estoppel (D) Admission

ஒப்பந்தம், கொடை அல்லது சொத்து சம்பந்தமான வேறெந்த ஏற்பாட்டின் விதிகள் ஒரு பத்திர வடிவத்தில் அமைக்கப்பட வேண்டியுள்ள போது நேர்வுகள் அனைத்திலும், அத்தகைய ஒப்பந்தம், கொடை அல்லது சொத்து சம்மந்தமான ஏற்பாடு அல்லது மற்ற விஷயத்தின் வரைமுறைகளை மெய்ப்பிதற்கு, அந்த பத்திரத்தையே தவிர வேறு எந்த சாட்சியத்தையும் அளித்தல் கூடாது. இதனை அடிப்படையாக கொள்ளும் கோட்பாடானது

(A) சிறந்த சாட்சி (B) முரண்தடை

(C) உறுதியளிப்பு முரண்தடை (D) ஏற்புரை

51. When a public officer is required by law to be appointed in writing and when it is shown that any particular person has acted as such other, the written order which he is appointed?

(A) May be proved (B) Need not proved

(C) Shall be proved (D) May be presumed

ஒரு பொது அலுவலர் சட்டத்தின்படி எழுத்து மூலமாக நியமனஞ் செய்யப்பட வேண்டியிருக்கும் போது, அத்தகைய அலுவலராகக் குறிப்பிட்ட ஒருவர் செயற்பட்டிருக்கின்றார் என்று காட்டப்படும்போதும், அவர் நியமனஞ் செய்யப்பட்ட எழுத்து வடிவ ஆணையை

(A) மெய்ப்பிக்கலாம் (B) மெய்பிக்க தேவையில்லை

(C) மெய்ப்பிக்க வேண்டும் (D) அனுமானிக்கலாம்

52. When the terms of any contract, grant or other disposition of property or any matter required by law to be reduced to the form of a document, have been proved, no evidence of any oral agreement or statement shall be admitted as between the parties to any suit instrument The exception to this is invalidation of document by

1. Fraud
2. Intimidation
3. Illegality
4. Adequacy of consideration

(A) 1 is correct
(B) 1 and 2 are correct
(C) 1, 2 and 3 are correct
(D) All are correct

ஓர் ஒப்பந்தம், கொடை அல்லது சொத்து சம்பந்தமான மற்ற ஏற்பாட்டின் வரைமுறைகளோ அல்லது சட்டத்தின்படி ஒரு பத்திரவடிவத்தில் அமைக்கப்பட வேண்டிய விஷயமோ மெய்ப்பிக்கபட்டிருக்கின்ற போது, வாய்மொழி உடன்படிக்கை அல்லது உரை எதையும் பற்றிய சாட்சியம் எதுவும், அத்தகைய பத்திரத்திற்குரிய தரப்பினர்கள் அல்லது அவர்களின் உரிமைப் பிரதிநிதிகளிடையே அனுமதிக்கப்படுப்படுதல் ஆகாது. இதற்கு விதிவிலக்கானது அந்த ஆவணத்தை பின்வருமாறு செல்லத்தக்கதாகாதது ஆகச் செய்வது

1. மோசடி
2. மிரட்டுதல்
3. சட்ட விரோதத் தண்மை
4. போதுமான மறுபயன்

(A) 1 சரியானது
(B) 1 மற்றும் 2 சரியானது
(C) 1, 2 மற்றும் 3 சரியானது
(D) அனைத்தும் சரியானது

53. A deed contain blanks Evidence cannot be given of facts which would show how they were meant to be filled, This is due to

(A) Intention not known
(B) Patent ambiguity
(C) Latent ambiguity
(D) Latent certainty

ஓர் ஆவணத்தில் வெற்றிடங்கள் இருக்கின்றன எவ்வாறு அவற்றை நிரப்பக் கருதப்பட்டது என்பதை காட்டும் பொருண்மைகளைப் பற்றிச் சாட்சியம் கொடுக்கப்படலாகாது. இது ஏனேனில்

(A) உட்கிடை எண்ணம் தெரியாது
(B) வெளிப்படையான ஐயத்திற்குறியது
(C) உட்கிடையான ஐயத்திற்குரியது
(D) வெளிப்படையான தெளிவிற்குரியது

54. 'A' sells to 'B', by deed "my estate at Rampur containing 100 bighas" 'A' has an (94) estate at Rampur not be given of the fact that the estate meant to be sold was on situated at different place and different size. This is due to the principle that the words of a written statement instruments must be construed according to their

(A) Latent Ambiguity

(B) Ambiguities

(C) Patent ambiguities

(D) Natural mean

"100 பிகாக்கள் கொண்ட, ராம்பூரிலுள்ள எனது தோட்டத்தை" என்று குறிப்பிட்டு, ஆவணம் மூலமாக 'ஆ' வுக்கு 'அ' விற்பனை செய்கிறார். 100 பிகாக்கள் கொண்ட தோட்டம் ராம்பூரில் 'அ' (94)வுக்கு இருக்கிறது. விற்பனை செய்யக் கருதப்பட்ட தோட்டமானது வேறோர் இடத்தில் அமைந்து வேறோர் அளவினைக் கொண்டதுமான ஒன்று என்றும் நிகழ்மை பற்றிச் சாட்சியம் கொடுக்கப்படுதல் ஆகாது. பின்வரும் கோட்பாட்டினால் இவ்வாறு கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(A) உட்கிடையான ஐயத்திற்குரியவை

(B) ஐயத்திற்குரியவை

(C) வெளிப்படையான ஐயத்திற்குரியவை

(D) இயற்கை சார்ந்த அர்த்தம்

55. 'A' sells to 'B', by deed "my house in Calcutta" A had no house in Calcutta, but it appears that he has a house at Howrah of which 'B' had been in possession since the execution of the deed. These facts may be proved to show that the deed related to the 'house at Howrah. This is due to the Principle given in

(A) False demonstration no necet

(B) Falsus in uno falsus in all

(C) Generalibus non-derogant specialibus

(D) Audi altrem partem

"கல்கத்தாவிலுள்ள எனது வீட்டை" என்று குறிப்பிட்ட ஆவணம் மூலமாக 'ஆ' வுக்கு 'அ' விற்பனை செய்கிறார். 'அ' வுக்கு கல்கத்தாவில் வீடு எதுவும் இல்லை ஆனால் 'அ' வுக்கு ஹௌராவில் ஒரு வீடு இருந்தது என்றும், அந்த ஆவணம் எழுதிக் கொடுத்தபோது அது 'ஆ'வின் அனுபோகத்தில் இருந்தது என்றும் தெரியவருகிறது. அந்த ஆவணம் ஹௌராவில் உள்ள வீடு சம்மந்தப்பட்டது என்பதைக் காட்ட இந்த நிகழ்மைகள் மெய்ப்பிக்கப்படலாம். இவை பின்வருபவற்றினை அடிப்படையாய் கொண்டுள்ளது.

(A) ஆவணத்தில் ஒன்றை தவற விளக்கின் அனைத்தும் தவறாகாது

(B) ஒன்றில் தவறு அனைத்திலும் தவறு

(C) பொதுகூட்டம் சிறப்பு கூட்டத்திற்கு வழி கொடுக்கும்

(D) விசாரணையின்றி முடிவெடுத்தல் கூடாது

56. Under Sec 101 of the Indian Evidence Act the burden of proof lies on a person

(A) Who substantially asserts the issue

(B) Who substantially has knowledge of the issue

(C) Who denies the issue

(D) Who substantially denies the issue

பிரிவு 101-ன் படி மெய்ப்பிக்கும் சுமையானது யாரை சார்ந்திருக்கும்?

(A) பிரச்சனையை கணிசமான அளவு உறுதிபடுத்துபவரிடம்

(B) பிரச்சனையில் கணிசமான அளவு தெளிவு உள்ளவரிடம்

(C) பிரச்சனையை மறுப்பவரிடம்

(D) பிரச்சனையை கணிசமான அளவு மறுப்பவரிடம்

57. 'A' prosecutes 'B' for theft. 'B' wishes the cowl to believe that, at the time in question, he was elsewhere. 'B' must prove it. this is due to reason that

(A) The example is about a particular fact

(B) It is about to a general fact

(C) This is about to a fact in issue

(D) This is about to an issue of fact

'அ' திருடியதாக 'ஆ' வழக்கு தொடருகிறார். 'ஆ' குறிக்கப்பட்ட காலத்தில், தான் வேறொரு இடத்தில் இருந்தார் என்பதை நீதிமன்றம் நம்பவேண்டுமென 'ஆ' விரும்புகிறார். அவர் அதை மெய்பித்தல் வேண்டும். ஏனெனில்

(A) இது குறிப்பிட்ட நிகழ்மையை குறித்தது

(B) இது பொது நிகழ்மையை குறித்தது

(C) இது தீர்வுதரு நிகழ்மையை குறித்தது

(D) நிகழ்மை குறித்த பிரச்சனை

58. 'A' wishes to prove a dying declaration by 'B'. Hence

(A) The burden of proving the death of B lies with A

(B) The burden of proving the death proof B lies with the prosecution

(C) No need to prove

(D) Burden lies with special commission appointed by the court

'ஆ' கொடுத்த மரணவாக்கு மூலத்தை மெய்ப்பிக்க 'அ' விரும்புகிறார். எனவே

(A) 'ஆ' வின் மரணத்தை மெய்ப்பிக்க வேண்டிய சுமை 'அ' வை சார்ந்துள்ளது

(B) 'ஆ' வின் மரணத்தை மெய்ப்பிக்க வேண்டிய சுமை 'ஆ' வின் குற்ற வழக்கிடை சார்ந்துள்ளது

(C) மெய்ப்பிக்க தேவையில்லை

(D) மெய்ப்பிக்க வேண்டிய சுமையானது நீதிமன்றத்தால் அமைக்கப்பெற்ற சிறப்பு ஆணைக்குழுவை சார்ந்துள்ளது

59. 'A' is charged with travelling on a railway without a ticket. The burden of proving that he had a ticket is on him. this is due to

(A) Fact is especially within the knowledge of a person

(B) This is about a particular fact

(C) This is about a fact in issue

(D) This is about an issue of fact

பயணச் சீட்டில்லாமல் இருப்புப் பாதைப் பயணம் செய்ததாக 'அ' குற்றம் சாட்டப்படுகிறார். தாம் ஒரு பயணச்சீட்டை வைத்திருந்தார் என்பதை மெய்ப்பிக்கும் சுமை அவரைச் சார்ந்தது. ஏனெனில்

(A) அவரின் அறிவுக்கு மாத்திரமே சிறப்பாகத் தெரிந்திருக்கும்

(B) இது குறிப்பிட்ட நிகழ்மையை குறித்தது

(C) இது தீர்வுதரு நிகழ்மையை குறித்தது

(D) இது நிகழ்மை குறித்த பிரச்சனையைக் குறித்தது

60. 'A' accused of murder, alleges that, by reason of unsoundness of mind, he did not know the nature of the act The court, under sec 105 of the Evidence Act, 1872

(A) Shall presume the absence of such circumstances.

(B) May presume the absence of such circumstances

(C) Shall presume the presence of such circumstances

(D) May presume the presence of such circumstances

கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட 'அ' என்பவர், புத்தி சுவாதீனமில்லாத காரணத்தால், அச்செய்கையின் தன்மையைத் தாம் அறிந்திருக்கவில்லை என்று சொல்கிறார். நீதிமன்றமானது இந்திய சாட்சிய 1872 சட்டம் பிரிவு 105-ன் படி

(A) அதற்கான சூழ்நிலை இல்லையென்று நீதிமன்றம் துணிபு கொள்ளலாகும்

(B) அதற்கான சூழ்நிலை இல்லையென்று நீதிமன்றம் மெய்யெனக் கொள்ளலாகும்

(C) அதற்கான சூழ்நிலை உள்ளதென்று நீதிமன்றம் துணிபு கொள்ளலாகும்

(D) அதற்கான சூழ்நிலை உள்ளதென்று நீதிமன்றம் மெய்யெனக் கொள்ளலாகும்

61. Section 107 and 108 of the Law of Evidence deals with

(A) Presumption of survivorship and death

(B) Presumption as to death

(C) Presumption as to survivorship

(D) None of the above

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 107 மற்றும் 108-ல் கூறப்பட்டுள்ளது

(A) எஞ்சியிருப்பது குறித்த துணிபு

(B) மரணம் குறித்து துணிபு

(C) எஞ்சியிருப்பது மற்றும் மரணம் குறித்து துணிபு

(D) மேற்குறிப்பிட்ட எதுவுமில்லை

62. Under the Law of Evidence possession is so essential to shift the burden of proof as to

(A) Ownership (B) Simple Mortgage

(C) Attachment (D) Liability

இந்திய சாட்சிய சட்டத்தின்படி உடைமையானது பின்வருவது குறித்த மெய்ப்பிக்கும் சுமையை மாற்றியமைக்க முக்கியமனதாகும்

(A) உடைமை உரிமை (B) எளிய அடமானம்

(C) இணைப்பு (D) கடன்பாடு

63. The good faith of a sale by a client to an attorney is in question in a suit brought by the client. The burden of proving the good faith of the transaction is on the attorney. This is due to

(A) Active confidence (B) Undue influence

(C) Coercion (D) Possibility of cheating

அட்டார்னி ஒருவருக்குக் கட்சிக்காரர் ஒருவரால் செய்யப்பட்ட விற்பனை நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதா என்பது, கட்சிக்காரரால் கொண்டு வரப்பட்ட ஓர் உரிமை வழக்கில் பிரச்சனக்குரியதாக இருக்கிறது. அந்த நடவடிக்கை நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதா என்பதை மெய்ப்பிக்கும் சுமை அட்டார்னியை சார்ந்தது. ஏனெனில் இது

(A) தீவிர நம்பிக்கைக்குரியது (B) தகாநிலை வற்புறுத்தல்

(C) கட்டாயப்படுத்துதலுக்கு உட்பட்டது (D) ஏமாற்றுவதற்கான சாத்தியம் உள்ளது

64. A person was born dining the continuance of a valid marriage between his mother and any man, or within two hundred and eighty days after its dissolution, the mother remaining unmarried and it can be shown that the parties to the marriage has no access to each other at any time when he could have been begotten. The court

(A) May presume the legitimacy of the child

(B) Shall presume the legitimacy of the child

(C) Opt for further proof

(D) It shall be the conclusive proof hence can't opt for further proof

ஒருவர் தம் தாய் ஒரு மனிதருக்கிடையே செல்லத்தக்க மணவாழ்க்கையில் தொடர்ந்து இருந்தவரும் போது, அல்லது அந்த மணம் முறிந்ததற்குப் பின்பு இருநூற்றெண்பது நாட்களுக்குள்ளாகவும், தாய் திருமணஞ்செய்து கொள்ளாத நிலையிலும், பிறந்தார் என்னும் பொருண்மையானது, எந்தக் காலத்திலேனும் மணமக்கள் ஒருவருக்கொருவர் உறவு கொள்ளும் வாய்ப்பு இருந்ததில்லை என்று காட்ட முடிந்தாலன்றி, நீதிமன்றமானது

(A) முறைப்படி பிறந்த மகன் தான் என மெய்யென கொள்ளலாகும்

(B) முறைப்படி பிறந்த மகன் தான் என துணிபு கொள்ளலாகும்

(C) கூடுதலான நிருபணத்தை எடுத்துக் கொள்ளலாம்

(D) அறுதியான நிருபணமாக இருப்பதால் கூடுதலான நிருபணம் தேவைபடாது

65. While examining a witness the court is to consider

(A) Whether the witness understands the question

(B) Whether he is able to speak

(C) Whether he is a lunatic

(D) None of the above

நீதிமன்றமானது ஒரு சாட்சியை விசாரிக்கும்போது

(A) அவரால் கேள்வியை புரியமுடிகின்றதா என கருத வேண்டும்

(B) அவரால் பேச முடிகிறதா என கருத வேண்டும்

(C) அவர் புத்தி சுவாதினம் உள்ளவரா என கருத வேண்டும்

(D) மேற் குறிப்பிட்ட எவையுமில்லை

66. It is shown that wife has committed suicide within a period of seven years from the date of her marriage and the relatives of her husband had subjected her to cruelty

(A) The court may presume that the woman had been abetted by her husband's relatives

(B) The court shall presume that the woman had been abetted by her husband's relatives

(C) It is the conclusive proof that she committed suicide due to abetment by the relatives

(D) The court can conclude that abetment by relatives is not proved

பெண் ஒருத்தி திருமணமானதிலிருந்து ஏழு ஆண்டுகளுக்குள்ளாக தற்கொலை செய்து கொண்டாலோ அல்லது அவளுடைய கணவனின் உறவினர்கள் அவளை கொடுமைக்குள்ளாக்கினார் என்று கண்டுபிடிக்கப்பட்டாலோ

(A) பெண்ணின் தற்கொலைக்கு கணவனின் உறவினர்கள் உடந்தை என நீதிமன்றம் மெய்யென கொள்ளலாகும்

(B) பெண்ணின் தற்கொலைக்கு கணவனின் உறவினர்கள் உடந்தை என நீதிமன்றம் துணிபு கொள்ளலாகும்

(C) பெண்ணின் தற்கொலைக்கு கணவனின் உறவினர்கள் உடந்தை என்பது அறுதியான நிருபணமாகும்

(D) நீதிமன்றமானது கணவனின் உறவினர்களின் உடந்தை நிருபணமாகவில்லை எனக் எடுத்துக் கொள்ளும்

67. When the question is whether a person has committed the dowry death of a woman and it is shown that soon before her death such woman had been subjected by such person to cruelty and harassment demanding dowry?

(A) The court shall presume that such person caused dowry death

(B) The court may presume that such person caused dowry death

(C) It in the conclusive proof for dowry death

(D) The court can conclude that dowry death is not proved

ஒருவர் வரதட்சணைக்காக ஒரு பெண்ணின் மரணத்தை விளைவித்தார் என்ற கேள்வி எழும்போது அவளுடைய மரணத்திற்கு முன்பு அந்தப் பெண்ணிடம் வரதட்சனை எதையும் கேட்டு, அதற்காக அவள் தொந்தரவுக்கு அல்லது கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தாள் என்று கண்டுபிடிக்கப்பட்டால்

(A) அந்த பெண்ணின் கணவர் வரதட்சணை சாவை ஏற்படுத்தியிருக்கிறார் என நீதிமன்றம் அனுமானிக்க வேண்டும்

(B) அந்த பெண்ணின் கணவர் வரதட்சணை சாவை ஏற்படுத்தியிருக்கிறார் என நீதிமன்றம் அனுமானிக்கலாம்

(C) பெண்ணின் தற்கொலைக்கு கணவன் உடந்தை என்பது அறுதியான நிருபணமாகும்

(D) நீதிமன்றமானது கணவனின் உடந்தை நிருபணமாகவில்லை எனக் எடுத்துக்கொள்ளும்

68. Section 116 and 117 of the Indian Evidence Act deals with

(A) Estoppel by conduct

(B) Estoppel by contract

(C) Quasi-estoppel

(D) Waiver

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 116 மற்றும் 117-ல் கூறப்பட்டுள்ளது.

(A) செயலினால் ஏற்படும் முரண்தடை

(B) ஒப்பந்தத்தினால் ஏற்படும் முரண்தடை

(C) முரண்தடை போல்வு

(D) உரிமை விடுப்பு

69. A person is unable to speak. He may give his evidence by writing. This is

(A) Primary Evidence

(B) Secondary Evidence

(C) Oral Evidence

(D) Material Evidence

ஒரு நபரால் பேச முடியவில்லையெனில் அவர் எழுதுவதின் மூலம் சாட்சியம் சொல்லலாம். இது

(A) தலைநிலை சான்று

(B) துணைநிலை சான்று

(C) வாய்மொழி சான்று

(D) முக்கியமான சான்று

70. A, during marriage, communicated his wife about his smuggling activities.

(A) Wife can be compelled to disclose

(B) If she consents can be communicated

(C) If husband consents can be communicated

(D) Only when husband and wife consent can be communicated

திருமணத்தின் பொழுது கணவர் தன் கடத்தல் நடவடிக்கைப் பற்றி மனைவியிடம் தெரிவித்தால்

(A) மனைவி அந்த செய்தியை வெளிப்படுத்தமாறு கட்டாயப்படுத்தலாம்

(B) மனைவி இசைந்தால் வெளிப்படுத்தலாம்

(C) கணவன் இசைந்தால் வெளிப்படுத்தலாம்

(D) கணவன் மற்றும் மனைவி இசைந்தால் மட்டுமே வெளிப்படுத்தலாம்

71. No one shall be permitted to give any evidence derived from unpublished official records relating to any affairs of state except with the permission of the officer and the head of the department concerned, who shall give or withhold such permission as he thinks fit. This is based on the principle

(A) Salus populi est suprema case

(B) Fiat justitia

(C) Jus ex injuria non oritur

(D) Lex suprema

அரசாங்கக் காரியங்கள் சம்மந்தப்பட்ட வெளியிடப்படாத அலுவல் பதிவிதழ்களிலிருந்து பெறப்பட்ட சாட்சியம் எதையும், சம்பந்தப்பட்ட துறையின் தலைமையலுவலரின் அனுமதியுடன் அல்லாமல், கொடுப்பதற்கு எவரும் அனுமதிக்கப்படுதல் ஆகாது; அந்த அலுவலர் தாம் பொருத்தமென நினைப்பதற்கேற்ப, அத்தகைய அனுமதியை கொடுக்கலாம் அல்லது கொடிக்காமலிருக்கலாம். இவை எதை அடிப்படையாய் கொண்டது

(A) மக்களின் நன்மையே மேலான சட்டம்

(B) நீதி நிலவுக

(C) தவறு ஒன்றிலிருந்து உரிமை எழுவதில்லை

(D) சட்டம் மேலானது

72. A, a client, says B an attorney "I wish to obtain possession of property by the use of a forged deed on which I request you to sue" This communication can be disclosed by the attorney. Since it is

(A) Not in defence of his client

(B) In furtherance of a criminal purpose

(C) It does not involve any confidential issue

(D) It does not affect the affairs of the state

கட்சிக்காரரான 'அ' என்பவர், அட்டார்னியான 'ஆ' என்பவரிடம் "பொய்யாக புனையப்பட்ட ஆவணத்தைப் பயன்படுத்தி, சொத்தின் அனுபோகத்தைப் பெற நான் விரும்புகிறேன்" அந்த ஆவணத்தின் மீது வழக்கிட வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்று கூறுகிறார். இதனை அட்டார்னியானவர் வெளியிடலாம். ஏனெனில்

(A) இது அவரது தரப்பினரை பாதுகாப்பதற்காக இல்லை

(B) குற்ற நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் உள்ளது

(C) இது ஏதேனும் இரகசிய விவகாரத்தை உள்ளடக்கவில்லை

(D) இது அரசு விவகாரத்தை உட்படுத்ததாக உள்ளது

73. No witness who is not a party to a suit shall be compelled to produce his title deeds to any property or any document in virtue of which he holds any property on pledgee or mortgagee or any document the production of which might tent to criminate him, unless he has agreed in writing to production of such deeds or some person through whom he claims. This is

(A) The privilege of the witness

(B) The liberty of the witness

(C) The power of the witness

(D) The negative duty of the witness

ஓர் உரிமை வழக்கில் தரப்பினர் அல்லாத சாட்சி எவரும், எந்தச் சொத்துக்கேனும் அவருக்குள்ள உரிமை ஒப்பாவணங்களையோ அல்லது எந்தப் பத்திரத்தின் ஆதாரத்தில் அவர் சொத்து எதையும் அடகு அல்லது அடைமானம் பெற்றவர் என்ற முறையில் வைத்திருக்கிறாரோ அந்தப் பத்திரம் எதையுமோ, அல்லது அந்தப் பத்திரத்தை தாக்கல் செய்தால் அவரை அது குற்றத்திற்கு உட்படுத்த முனையுமோ அந்தப் பத்திரம் எதையுமோ தாக்கல் செய்யுமாறு, அவர் மூலமாக அவர் பாத்தியத்தை செய்வதாக எழுத்துமூலமாக அவர் ஒப்பு கொண்டிருக்கிறார் என்றாலன்றி, கட்டாயப்படுத்தப்படுதல் ஆகாது

(A) இது சாட்சியின் சிறப்புரிமை ஆகும்

(B) வரிப்புரிமையாகும்

(C) அதிகாரம் ஆகும்

(D) சாட்சியின் எதிர்மறைக் கடமையாகும்

74. Witness is not excused from answer on ground that the answer will

(A) Criminate him

(B) Expose him contractual liability

(C) Create confusion

(D) Expose him tortious liability

பதில் சொல்லும் பொறுப்பிலிருந்து சாட்சி பின்வரும் காரணத்தினால் விடுவிக்கப்பட மாட்டார்

(A) பதிலால் அவர் குற்றத்திற்கு உள்ளதாக நேரிடும்

(B) அவரை ஒப்பந்த கட்டுபாட்டிற்கு எடுத்துச் செல்லும்

(C) குழப்பத்தை ஏற்படுத்தும்

(D) தீங்கியல் கடப்பாட்டிற்கு உட்படுத்தும்

75. A conviction proceeds upon the uncorroborated testimony of on accomplice.

(A) The conviction is illegal

(B) The conviction not illegal

(C) Considering irrelevant consideration

(D) Not considering relevant consideration

குற்ற வழக்கு நடவடிக்கை கூட்டு குற்றாவாளியின் உறுதியூட்டப்படாத வாக்குமூலத்தை கொண்டிருந்தால்

(A) தண்டனை தீர்ப்பானது சட்டத்திற்கு மாறானது

(B) தண்டனை தீர்ப்பானது சட்டத்திற்கு மாறானது ஆகாது

(C) தொடர்புற்றவையை கவனத்தில் கொள்வதாகும்

(D) தொடர்புற்றதை கவனத்தில் கொள்ளாததாகும்

76. The number of witness required to prove forgery is

(A) Two
(B) Three
(C) One
(D) No particular number

மோசடியை உறுதி செய்ய எத்தனை சாட்சியங்கள் தேவை

(A) இரண்டு
(B) மூன்று
(C) ஒன்று
(D) குறிப்பிட்ட எண் ஏதுமில்லை

77. A Judge shall admit the evidence

(A) If he thinks that if fads are proved it would be relevant

(B) If strongly believes that it would be relevant

(C) If he is satisfied that it would be relevant

(D) If there is reasonable likelihood that it would be relevant

ஒரு நீதிபதி ஒரு சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனில்

(A) நிகழ்மையை நிருபிக்கும்போது அது தொடர்புடையதாக இருக்கும் என எண்ணும் போது

(B) தொடர்புடையதாக இருக்குமென பலமாக நம்பும்போது

(C) தொடர்புடையதாக இருக்குமென திருப்தி அடையும் போது

(D) அத்தொடர்புடையது என நியாயமாக நம்பும்போது

78. The difference between section 53 and 140 is that

(A) Section 53 deals with the character of the accused section 140 deals with the character of the witness

(B) Section 53 deals with the character of the witness and 140 deals with the character of the accused

(C) Section 53 deals with criminal and civil proceedings section 140 only deals with criminal proceedings

(D) Section 53 deals with examination and section 140 deals with relevancy

பிரிவு 53 மற்றும் 140ல் உள்ள வேறுபாடு

(A) பிரிவு 53 ல் எதிரியின் குண இயல்பும் பிரிவு 140ல் சாட்சியின் குண இயல்பும் கூறப்பட்டுள்ளது

(B) பிரிவு 53 ல் சாட்சியின் குண இயல்பும் பிரிவு 140ல் எதிரியின் குண இயல்பும் கூறப்பட்டுள்ளது

(C) பிரிவு 53 ல் குற்றவியல் மற்றும் உரிமையியல் நடவடிக்கை பற்றியும் பிரிவு 140ல் குற்றவியல் நடவடிக்கை பற்றியும் கூறப்பட்டுள்ளது

(D) பிரிவு 53 ல் விசாரித்தல் மற்றும் பிரிவு 140ல் தொடர்புற்றமை பற்றியும் கூறப்பட்டுள்ளது

79. After the Dying declaration is given

(A) Evidence may be given only to corroborate

(B) Evidence may be give only to contradict

(C) Evidence may be given to contradict and corroborate

(D) None of the above

மரண வாக்குமூலமானது அளிக்கப்பட்ட பின்பு

(A) உறுதியூட்ட மட்டும் சாட்சியம் கொடுக்கப்படலாம்

(B) முரண்பட மட்டும் சாட்சியம் கொடுக்கப்படலாம்

(C) முரண்பட மற்றும் உறுதியூட்ட சாட்சியம் கொடுக்கப்படலாம்

(D) மேற்குறிப்பிட்ட எதுவுமில்லை

80. 'A' date of birth is in question. It has not been registered with the birth and death registar. But the deceased surgeon regularly kept in the course business, stating that, on a given days, he attended A's mother and delivered her of a son This is relevant fact under

(A) Sec 32 of the Indian Evidence Act (B) Sec 159 of the Indian Evidence Act

(C) Sec 160 of the Indian Evidence Act (D) Sec 161 of the Indian Evidence Act

'அ' என்பவரின் பிறந்த தேதி என்ன என்பது கேள்வி. அலுவல் நடப்பு முறையில் ஒழுங்காக வைத்து வரப்பட்ட, இறந்து போன அறுவை மருத்துவர் ஒருவருடைய நாட்குறிப்பில் ஒரு குறிப்பிட்ட நாளன்று அவர் 'அ' வின் தாய்க்கு மருத்துவம் பார்த்ததாகவும் குறிப்பிடுகிற ஒரு பதிவு பின்வரும் எவற்றை அடிப்படையாய் கொண்டு தொடர்புற்ற பொருண்மை ஆகும்

(A) இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 32 (B) இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 159

(C) இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 160 (D) இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 161

ROUGH WORK

**ROUGH WORK**